பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 04 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக பெறப்பட்ட புகார்களில் 96 சதவீதத்திற்கு உடனடி தீர்வுகாணப்பட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. மகளிர் நலனுக்கு எதிராக திரிணமுல் காங்கிரஸ் செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

3. தொழில் வளர்ச்சியிலும், தொழில்நுட்ப பயன்பாட்டிலும் ஒடிஷா புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4. செமி கண்டெக்டர் கொள்கையை தில்லி அரசு வகுத்து வருவதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

5. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 148 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக பெறப்பட்ட புகார்களில் 96 சதவீதத்திற்கு உடனடி தீர்வுகாணப்பட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 15-ஆம் தேதி தொடங்கி, இதுவரை 3 லட்சத்து 23 ஆயிரத்து 99 புகார்கள் பெறப்பட்டதாக தேர்தல் ஆணையத்தின் செய்தகிகுறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 3 லட்சத்து 10 ஆயிரத்து 393 புகார்களுக்கு 100 நிமிடங்களுக்குள் தீர்வுகாணப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மேற்குவங்க சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக வரும் 23-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 152 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி, திரிணமுல் காங்கிரஸ், காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆளும் திரிணமுல் காங்கிரஸ் அரசு ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவாக செயல்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**Jhargram, Purulia, Bishnupur** மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தேர்தல் பிரச்சாம் மேற்கொண்டு பேசிய அவர், மகளிர் மேம்பாட்டிற்கு பிஜேபி முன்னுரிமை அளித்துள்ளதாக கூறினார்.

மகளிர் நலனுக்கு எதிராக திரிணமுல் காங்கிரஸ் செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

திரிணமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, **Hooghly** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

மகளிர் நலனுக்காக தமது அரசு நிறைவேற்றிய திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

தமிழகத்திலும் திமுக, காங்கிரஸ், அஇஅதிமுக, பிஜேபி, நாம் தமிழர் மற்றும் தவெக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>>

மகளிர் இடஒதுக்கீட்டினை செயல்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்து காங்கிரஸ் கட்சி தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி குற்றம் சாட்டியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிர் இடஒதுக்கீட்டை செயல்படுத்துவது தொடர்பான அனைத்து அம்சங்களையும் விரிவாக எடுத்துரைத்த பின்னரும் காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் அது தொடர்பான மசோதாக்களுக்கு எதிராக வாக்களித்ததாக குறை கூறினார்.

மக்களவையிலும், சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க காங்கிரஸ் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2010-ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி இதற்கான மசோதாவை கொண்டுவந்தபோது பிஜேபி அதற்கு முழு ஆதரவு அளித்ததை அவர் சுட்டிக்காட்டினர்.

இருப்பினும் காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக அந்த மசோதா கிடப்பில் போடப்பட்டதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தொழில் வளர்ச்சியிலும், தொழில்நுட்ப பயன்பாட்டிலும் ஒடிஷா புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புவனேஷ்வரில் அதிநவீன முப்பரிமாண கண்ணாடி மூலக்கூறு தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகளை இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த தொழிற்சாலையில் அதிநவீன முப்பரிமாண கண்ணாடி உற்பத்தி செய்யப்பட உள்ளதாகவம் அவர் தெரிவித்தார்.

நாட்டிலேயே முதல் முறையாக இந்த தொழிற்சாலை இங்கு தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொழில் முதலீட்டிற்கு உகந்த சூழ்நிலையை ஒடிஷா அரசு ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தில்லி அரசு செமி கண்டெக்டர் கொள்கையை வகுத்து வருவதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுயசார்பு இந்தியாவிற்கு வலு சேர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

செமி கண்டெக்டர் முனையமாக தில்லியை உருவாக்கும் வகையில் இந்த கொள்கை வகுக்கப்பட்டு வருவதாகவும் திருமதி ரேகா குப்தா கூறினார்.

<<<<<<>>>>>>

மணிப்பூரில் சட்டம் — ஒழுங்கை பாதுகாக்க கூடுதல் படைகள் பணியமர்த்தப்பட உள்ளதாக அம்மாநில உள்துறை அமைச்சர் திரு **Govindas Konthoujam** கூறியுள்ளார்.

இம்பாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போது மத்திய ஆயுதப்படையின் **184** கம்பெனிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் கூடுதல் படைகள் மாநிலத்திற்கு வர உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - **15** செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருச்சி மாவட்டம்

*(வாய்ஸ் பைட் — கதிரவன் - Sec.)*

<<<<<<>>>>>>

இந்தியா - அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான மூன்றுநாள் பேச்சுக்கள் நாளை மறுநாள் வாஷிங்டனில் தொடங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சார்பில் 12-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் இதில் பங்கேற்க உள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 148 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டர்பனில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **147** ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

**Shafali Verma** அதிரடியாக ஆடி **38** பந்துகளில் **57** ரன் குவித்தார்.

--------------

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Suraj Kumar Chand** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-------------------

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டி எகிப்தின் **Cairo**-வில் இன்று தொடங்கியது.

**<<<<<<END>>>>>>**